# மூவேந்தர் வரிசை முறை

**செ. இந்திரா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அ.வீ.வா.நி. திரு. புட்பம் கல்லூரி (தன்னாட்சி),
பூண்டி – 613 503, தஞ்சாவூர் மாவட்டம்.

தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர் சேர, சோழ, பாண்டியராவர். அவர்களை இவ்வாறு அழைக்கும் வரிசை முறை நீண்ட காலமாக வழக்கத்திலிருக்கிறது. இலக்கணத்திலும் இலக்கியத்திலும் நிகண்டுகளிலும் இவ்வரிசை முறை குறித்த தகவல்களைக் காண முடிகிறது. இத்தகவல்களால் மூன்று வேறுபாடுடைய வரிசை முறையினை அறிய முடிகிறது.

**சேர பாண்டிய சோழர் வரிசை**

இலக்கணத்திலும் இலக்கியத்திலும் மூவேந்தரின் அடையாளப் பூக்களைக் குறிப்பிடும்பொழுது சேர பாண்டிய சோழர் என்னும் வரிசை முறையில் குறிப்பிட்டுள்ளனர். புறநானூற்றின் தொகுப்பிலும் இம்முறையினைக் கடைப்பிடித்துள்ளனர்.

வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
**போந்தை வேம்பே ஆர்**என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்

(தொல்காப்பியம் பொருளதிகாரம், 63)
என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் மூவேந்தரின் அடையாளப்பூவினைக் குறிப்பிடும்பொழுது சேர பாண்டிய சோழர் என்னும் வரிசை முறையில் குறிப்பிட்டுள்ளார்.

இளம்பூரணனாரும் பொ.வே. சோமசுந்தரனாரும் தம் உரையின் மேற்கோள் பாடல்களில் இவ்வரிசை முறையிலேயே உதாரணங்கள் காட்டியுள்ளனர்.

…………………… திருந்துவேல் வானவன்
போரெதிரிற் **போந்தையா** பூ
………… கடுமான் நெடு**வழுதி**
ஏத்தல்சால் **வேம்பின்** இணர்
கலங்கல் ஒலிபுனல் **காவிரி நாடன்**
அலங்கல் அமரழுவத் **தார்**

என மூவேந்தரின் அடையாளப் பூக்கள் சேர பாண்டிய சோழர் வரிசை முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

*சீர்சால்* **போந்தை வேம்பொ டாரே** (புறப்பொருள் வெண்பா மாலை)
என்று புறப்பொருள் வெண்பா மாலையின் பொதுவியல் படலத்தில் கூறப்பட்டுள்ளது. இப்படலத்தின் பன்னிரண்டு துறைகளுள் முதல் மூன்று துறைகளில் மூவேந்தரின் பூக்கள் இவ்வரிசை முறையில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளன.

**வானவன் பூப்**புகழ் தன்று.
**வழுதி** சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று
**செம்பியன்** மலைப்பூ உரைத்தன்று

இவ்விரு இலக்கண நூல்களிலும் சேர பாண்டிய சோழர் என்னும் வரிசை முறையில் மூவேந்தர் சுட்டப்பட்டுள்ளனர்.

சங்கப் பாடல்களில் மூவரின் பூக்களையும் ஒருங்கு எடுத்துரைக்கும் பாடல்கள் மூன்றாகும்.

**இடும்பனை** வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கரும்சினை **வேம்பின்** தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் **ஆர்**மிடைந் தன்றே நின்னோடு
பொருவோன் கண்ணியும் **ஆர்**மிடைந் தன்றே (புறநானூறு 45)

இப்பாடலில் கோவூர்க்கிழார் சோழர் குடியைச் சார்ந்த நலங்கிள்ளி நெடுங்கிள்ளியின் பகைமையுணர்வினைக் கூறி அவர்களை நெறிப்படுத்தியபோது சேர பாண்டி சோழர் முறையில் மூவரின் அடையாளப் பூக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இரும்பனைப் **போந்தைத்** தோடும் கருஞ்சினை
அரவாய் **வேம்பின்** அம்குழைத் தெரியலும்
ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபட வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்<u>ஆர்</u> கண்ணி கரிகால் வளவன் (பொருநாற்றுப்படை, 143–148)

பொருநராற்றுப்படையில் இடம்பெறும் இவ்வடிகளில் முடத்தாமக் கண்ணியார் சோழன் கரிகால் பெருவளத்தானின் வெண்ணிப் போர் நிகழ்வினைக் குறிப்பிடும்பொழுது சேர பாண்டி சோழர் வரிசை முறையிலேயே அவர்களின் அடையாளப் பூக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

புறநானூற்றுத் தொகுப்பு முறையிலும் இதே வரிசை முறை பின்பற்றப்பட்டு பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

அசோகருடைய கற்றூண் அரசாணை (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) பேரரசின் தென்னிந்திய எல்லையைக் குறிப்பிடும்பொழுது சேர, பாண்டி, சோழ அரசுகளைக் குறிக்கிறது (ப. 97) எனும்பொழுது சங்க காலத்திலிருந்த சேர, பாண்டி, சோழர் வரிசை முறையில் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

இவ்வரிசை முறைக்கு அறிஞர்கள் கூறும் காரணம், அரச முறை முதலில் குறிஞ்சி நிலத்திலும் பிறகு முல்லை நிலத்திலும் அடுத்து மருத நிலத்திலும் தோன்றிப் பரவி நிலைபெற்றமை என்பர். ஆயினும், சேர சோழ பாண்டியர் என்னும் சொல்லாட்சி முறையே உலகியல் வழக்கில் நிலவுகிறது. என்றைக்கும் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு மூவேந்தரையும் தொல்காப்பியர், ஐயனாரிதனார், கோவூர்க்கிழார், முடத்தாமக்கண்ணியார், புறநானூற்றைத் தொகுத்த புலவர் முதலானவர்கள் சேர பாண்டி சோழர் வரிசை முறையில் குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகிறது.

**பாண்டிய சோழ சேரர் வரிசை**

ஒரே ஒரு பாடலில் பாண்டிய சோழ சேரர் வரிசை முறையில் வேந்தர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். குன்றூர்க் கிழார் மகனார் பாடிய மகட்பாற்காஞ்சித் துறையிலமைந்த பாடலில் ஒரே ஒரு கோட்டையையுடைய குறுநில மன்னனொருவன் தன் மகளைப் பெண் கேட்க வணக்கமின்றி

வருவார்க்கு, அவர்கள் வேப்பம்பூவும் ஆத்தியும் பனம்பூவும் சூடிய மூவேந்தரேயாயினும் அவர்களுக்குப் பெண் கொடுக்கச் சம்மதிக்க மாட்டேன் என்று கூறும்பொழுது வேந்தரின் அடையாளப்பூவினைப் பாண்டிய சோழ சேரர் வரிசை முறையில் குறிப்பிட்டுள்ளார்.

வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும் தன்தக
வணங்கார்க்கு ஈகுவன் அல்ல (புறநானூறு 338)

இப்பாடலில் மட்டும் பாண்டியர் குடி முதற்கண் வைத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

**சேர சோழ பாண்டியர் வரிசை முறை**

கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றிய நிகண்டுகளில் சேர சோழ பாண்டியர் என்னும் வரிசை முறையில் மூவேந்தர் பெயர்கள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. பேச்சு வழக்கிலும் இம்முறையே வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்த ஒன்றாகும்.

**போந்தின்** கண்ணியன் (சேந்தன் திவாகரம், 180)
**ஆர்**த்தார்க்கோன் (சேந்தன் திவாகரம், 181)
**வேம்பின்** கண்ணிக்கோ (சேந்தன் திவாகரம், 182)

தமிழில் தோன்றிய முதல் நிகண்டான சேந்தன் திவாகரத்தின் இரண்டாவது தொகுதியாகிய மக்கட் பெயர்த் தொகுதியில் மூவேந்தரின் பெயர்கள் சேர சோழ பாண்டியர் வரிசை முறையில் கூறப்பட்டுள்ளன.

**போந்தின் தாரோன்** (சூடாமணி நிகண்டு, 18)
**ஆரின்மா லையனே** (சூடாமணி நிகண்டு, 19)
**வேம்பின் தாரோன்** (சூடாமணி நிகண்டு, 20)

திவாகரத்திற்குப் பிறகு தோன்றிய சூடாமணி நிகண்டின் மக்கட் பெயர்த் தொகுதியில் சேர சோழ பாண்டியர் வரிசை முறை காணப்படுகிறது.

**போந்தின் கண்ணியன்** (பிங்கல நிகண்டு, 745)
**ஆரின் கண்ணியன்** (பிங்கல நிகண்டு, 747)
**வேம்பின் கண்ணியன்** (பிங்கல நிகண்டு, 750)

சூடாமணிக்குப் பிறகு தோன்றிய பிங்கல நிகண்டிலும் சேர சோழ பாண்டியர் வரிசை முறையில் மூவேந்தர் பூக்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சங்க காலத்தில் சேர பாண்டிய சோழர் என்னும் வரிசை முறையே இருந்துள்ளது. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தினால் சேர சோழ பாண்டியர் என்னும் வரிசை நிலைபெற்றுவிட்டது. இதனால், நிகண்டுகளிலும் இவ்வரிசை முறையே பின்பற்றப்பட்டுள்ளமை காணமுடிகிறது.

**உதவிய பனுவல்கள்**

1. சங்க இலக்கியச் சொல்லடைவு, பெ. மாதையன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007.
2. தொல்காப்பியம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2005, பன்னிரண்டாம் பதிப்பு 2013.

3. புறப்பொருள் வெண்பா மாலை, பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1955.
4. சங்க இலக்கியம் மூலமும் உரையும், தொகுதி – II, பத்துப்பாட்டு, ச.வே. சுப்பிரமணியன் உரை, தமிழண்ணல், சுப. அண்ணாமலை முதன்மைப் பதிப்பாசிரியர்கள், கோவிலூர் மடாலயப் பதிப்பு, வர்த்தமானன் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2022.
5. சங்க இலக்கியம் மூலமும் உரையும், தொகுதி – 10, புறநானூறு, இரா. இளங்குமரன் உரை, தமிழண்ணன், சுப. அண்ணாமலை முதன்மைப் பதிப்பாசிரியர்கள், கோவிலூர் மடாலயப் பதிப்பு, வர்த்தமானன் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2022.
6. தமிழ் அகராதிக்கலை, சுந்தர சண்முகனார், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2001.
7. தமிழ் நிகண்டுகள் (தொகுதி – 1), ச.வே. சுப்பிரமணியன் பதிப்பாசிரியர், மெய்யப்பன் பதிப்பகம், 2008.
8. பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, கார்த்திகேசு சிவத்தம்பி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.